அதனுல் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் தொழில் அமைதி நிலவுவதற்கும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்ணுநோன்பு, வேலை நிறுத்தம் ஆகிய இரண்டு காரணங்களுக்காகப் பேரவையின் விவாதங்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்று பல தீர்ப்புகளைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிருர்கள். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க எனது இசைவைக் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோவை பொறியியற் கல்லூரியில் "ராகிங்" (Ragging) காரணமாக மாணவர் தற்கொலை.

*DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I have given notice that this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the suicide by Sri V. Govindaraju, a first-year B.E. student in Coimbatore on 11th July 1967. He is alleged to have found himself unable to withstand the ragging by the senior students and hence was found hanging in his hostel room. Sir, I request you to allow this House to discuss this tragedy, though I do believe that ragging in small doses has its own advantage namely creatingstronger men who can face public life. But now it has gone beyond all control and we are answerable to the parents. Even if the Hon. the Chief Minister or the Leader of the House can give us some assurance, I am prepared to withdraw this adjournment motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்களையும், அவர்களுடைய தீர்மானத்தைப் படித்துவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தின்மீது சபையில் விவாதிப்பதற்குச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி கேட்டு ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறேன்.

"கல்லூரிகள் திறக்கப்படும் இச்சமயத்தில் புதிய மாணவர்களைத் துன்புறுத்தி வரவேற்பு அளிக்கும் வகையிலான "ராகிங்" என்னும் இந்த முறைக்கு ஆளாகி, கோவை என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றின் முதலாண்டு மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிய வருகிறது. இது போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாவண்ணம் தடுக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோவைக் கல்லூரியில் நடைபெற்ற இந்தத் துன்பகரமான நிகழ்ச்சி காலை செய்தித் தாளில் வந்தது. அதிலே கோவைக் கல்லூரி ஒன்றில் என்று இருக்கிறதே தவிர, எந்தக் கல்லூரி என்று தெளிவாக இல்லை. செய்தி வந்தவுடனேயே தொழில் நுட்பக் கல்வி இயக்குநரை அழைத்து இதுபற்றிக் கேட்டேன். அவரும் எந்தக் கல்லூரி என்று தெரியவில்லை, அதுபற்றி விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிருர். அதோடு கல்லூரிகளில் "ராகிங்" கூடாது என்று சுற்றறிக்கை விடப்பட்டு சென்னை பொறியியல் கல்லூரியில் அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்கெனவேயும் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்திஞல் தற்கொலை நிகழ்ச்சி ஏற்பட்டது என்ற முழு விவரங்களும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. எந்தக் கல்லூரி என்றும் தெரியவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து, "ராகிங்" காரணமாக இருந்தால், இதற்குக் காரணமான மாணவர்கள் யார் என்று கண்டு அறியும்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு ஆணை பிறப்பித்துள்ளேன், அவரும் அதற்கான

முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, "ராகிங்" முறைகளில் ஈடுபடுகிற மாணவர்கள் யாராக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ற சுற்றறிக்கையை எல்லாக் கல்லூரிகளுக்கும், குறிப்பாக இந்தக் கல்லூரிக்கும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரை அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன். சட்ட-ஒழுங்கு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தை விவாதிப்பதால் தகவல்கள் பெற வாய்ப்பு ஏற்படாது. இது ஒற்றி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வரவில்லையென்றாலும், இதைப்பற்றி உடனடியாக கவனிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பற்றிய அறிவிப்பு பின்னால் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணவர்களுடைய நடவடிக்கைகளைக் குறித்து, உண்ணாநோன்போ அல்லது வேறு தவறான செயல்கள், அல்லது செய்கிற நல்ல காரியங்கள் அல்லது தீமையான காரியங்கள்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் விவாதத்தை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதாகப் பல தீர்ப்புக்கள் இருக்கிற காரணத்தினால், இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு எனது இசைவைத் தர நான் மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

பார்க் டவுன் தொகுதியில் சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 41-வது விதியின்படி உடனடி முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I gave this Call Attention Notice in the month of March and now it has come for reply.

I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, namely, the deteriorated law and order situation in the Park Town Constituency and the necessity to prevent the constant harassment and damage to the property of the D.M.K. and Swatantra workers in that area.

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, as the hon. Member has stated, these arrests and incidents took place in February and March and though this Call Attention Notice was not discussed previously, certain short notice questions were put on the same subject and I have replied to them. It is true that there was harassment of D.M.K. and Swatantra Party workers during the period of elections. But fortunately now normalcy has been restored not due to the fact that those people who were involved in the harassment have realised their defects but due to entirely different circumstances like the change of Government.

As far as the February and March incidents are concerned, I have made several enquiries from the police official quarters, whether any complaints have been received and registered during that period. What I have received after my enquiry is this. No specific complaints have been received by the Police from any quarters charging any person with having subjected workers either of the D.M.K. or Swatantra Party to harassment or with having caused damages to the properties of these parties' workers. Further, no specific report has been received either from the Officers of the Uniform Branch or from the Intelligence section regarding the above subject.